# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

*1865 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

## பதவிகள் - வெற்றிடம்

***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும் மேற்படி வர்த்தமானியில் பார்க்கவும்***

### இலங்கை நில அளவைத் திணைக்களம்

*இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்*

இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவை யாளர் பதவிக்கு நியமனம் செய்வதற்கு பின்வரும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2014.06.23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு ''நில அளவையாளர் நாயகம், நில அளவையாளர் நாயகம் அலுவலகம், இல. 150, கிருல வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு 5'' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பயிலுநர் நில அளவையாளர் பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம்'' எனும் பதம் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும். தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் தவிர்ந்த வேறு விதங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

2. சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருப்பதுடன் அது நிரூபிக்கப்படவும் வேண்டும் :-

- (அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
- (ஆ) சிறந்த நன்னடத்தை உடையவராகவும், சிறந்த உடற்றகுதி உடையவராகவும் இருத்தல் வேண்டும் ;
- (இ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்குக் குறையாமலும் 33 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;
- (ஈ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று சகல கல்வித் தகைமைகளும் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும் என்பதைக் கவனத்திற் கொள்க.

3. **சேவை நிபந்தனைகள் :-**

- (i) *சம்பளம்.-* இப்பதவிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட திரட்டிய மாதச் சம்பளம் பின்வருமாறு பொ. நி. சுற்றறிக்கை இல. 06/2006 (iv) MN-5-2006A

  ரூபா 16,720 - 10 x 320 - 11 x 365 - 15 x 450 - ரூபா 30,685.
- (ii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும் ;
- (iii) அரசாங்க சேவை நியமனங்களுக்குரிய பொதுவான நிபந்தனைகளுக்கும், 2006.02.27 ஆந் திகதிய 1434/5 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடிரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை நில அளவையாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் மற்றும் இச்சேவைப் பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்ட அல்லது காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு, தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கைத் நில அளவைத் திணைக்களத்தில் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

4. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :-**

- (i) நியமனம் பெறுபவர்கள் திணைக்கள விடயங்களில் ஆரம்பப் பயிற்சிகளைப் பெறுதல் வேண்டும் ;
- (ii) அவர்களுக்கு வழங்கப்படும் அரசாங்க களஞ்சியப் பொருட்களுக்காக 25,000 ரூபாவைப் பிணைப்பணமாகச் செலுத்துவதற்கு அவர்கள் கடப்பாடுடையவர்கள் ஆவர்.
- (iii) பயிற்சிக் காலம் முடிவுற்றதும் அவர்கள் இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் நில அளவையாளர் ஒருவராக ஆறு (6) வருட காலத்திற்குப் பணியாற்றுவதற்கு நியமிக்கப் படுவார். அந்நோக்கத்திற்காக நியமிக்கப்படுபவர்கள் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதற்கு வேண்டப்படுவதுடன் 1,50,000 ரூபாவை விடக் குறையாத பெறுமதியுடைய சொத்துக்களை உடைய பிணை முறி ஒன்றையும் செலுத்துமாறு வேண்டப்படுவர்.

5. **கல்வித் தகைமைகள்.-** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட நில அளவையியல் விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. **தேர்ந்தெடுக்கும் முறை.-** விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுவர். இது தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சித்தி பெற்று வெளியேறிய ஒரே பிரிவிலுள்ள நில அளவை விஞ்ஞானப் பட்டதாரிகள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்படும். பட்டப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட சிறப்புச் சித்தியும் (Merit) அடிப்படையாக கவனத்திற்கு எடுக்கப்படும். விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்த சகல நில அளவை விஞ்ஞானமாணிப் பட்டதாரிகளும் நேர்முகப் பரீட்சையின்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகளையும் ஒளிப்படப் பிரதிகளையும் நேர்முகப் பரீட்சைச் சபையில் சமர்ப்பித்தல் வேண்டும் :-

- (i) பிறப்புச் சான்றிதழ் ;
- (ii) பட்டப் படிப்புச் சான்றிதழும் ஏனைய கல்வித் தகைமைச் சான்றிதழ்களும் ;
- (iii) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு ;
- (iv) இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள். இவற்றில் ஒன்று, சம்பந்தப்பட்ட கிராம சேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் மேல் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.

7. நியமனத்திற்காக வேண்டப்பட்ட தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்களும் மற்றும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

8. பரீட்சார்த்தி எவரேனும் தகைமையற்றவர்கள் எனக் கண்டுபிடிக் கப்பட்டால், அவர் நேர்முகப் பரீட்சைக்கு முன்னதாகவோ அல்லது நேர்முகப் பரீட்சையின்போதோ அல்லது நேர்முகப் பரீட்சையின் பின்னரோ அல்லது அதன் பின் எந்த நேரத்திலும் அவருடைய பரீட்சார்த்தத் தன்மை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு.

9. ஏற்கனவே அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப் பங்களைத் தமது திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். தபாலில் காணாமல் போகும் எந்தவொரு விண்ணப்பம் தொடர்பிலும் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

10. இவ்வாட்சேர்ப்புக் குறித்த எண்ணிக்கை மற்றும் நடவடிக்கை களை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச்செய்தல் தொடர்பிலான முழு அதிகாரங் களும் நில அளவையாளர் நாயகம் சார்ந்தது. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி வாசகங்களிடையே மொழிபெயர்ப்பில் ஏதும் முரண்பாடு தென்படின் சிங்கள மொழி வாசகங்களில் கூறப்படுவதே செல்லுபடியாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

நிஹால் குணவர்த்தன,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
இல. 150, கிருல வீதி,
கொழும்பு 5,
2014, மே 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்**

1. பெயர் :
   - 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில், உ-ம் (SILVA, A.B) :----.
   - 1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   - 1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :----.
   - 1.4 தேசிய அடையாள அட்டை இல. :----.
   - 1.5 வழங்கப்பட்ட திகதி :----.
2. முகவரி :
   - 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   - 2.2 நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழ்) :----.
   - 2.3 தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
3. தொலைபேசி இலக்கம் :

   கையடக்கத் தொலைபேசி :----.

   வதிவிடத் தொலைபேசி :----.
4. குடியுரிமை (பரம்பரையாகவா அல்லது பதிவு மூலமாகவா என்பதைக் குறிப்பிடுக. பதிவு மூலமாயின் பதிவு இலக்கத்தைக் குறிப்பிடுக) :----.
5. பால் :

   ஆண் - 0, பெண் - 1 [ ]

   (கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தைக் குறிப்பிடவும்.)
6. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? :----.
7. பிறந்த திகதி :

   வருடம் [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

   7.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது :

   வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]
8. கல்வித் தகைமைகள் :
   - (i) பல்கலைக்கழகம்/கல்வி நிறுவனம் :----.
   - (ii) பட்டமும், பட்டம் பெற்ற திகதியும் :----.
   - (iii) பதிவு இலக்கம், பதிவுத் திகதி :----.
   - (iv) வெளிவாரி/உள்வாரி :----.
   - (v) சுட்டெண் :----.
   - (vi) வகுப்பு (மேல் பிரிவு/கீழ் பிரிவு) :----.
   - (vii) பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :----.
9. கணினி விஞ்ஞானம் தொடர்பாக பின்பற்றிய பாடநெறிகள் சம்பந்தமான விபரங்கள் :----.
10. தாய்மொழிக்கு மேலதிகமாக ஏனைய மொழிகளில் உள்ள தேர்ச்சிகளும் சித்தியெய்திய பரீட்சைகளும் :----.
11. ஏனைய செயற்பாடுகளும் தகைமைகளும் :----.
12. ஏதேனும் குற்றத்திற்காக நீர் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப் பட்டிருப்பின் அவை தொடர்பான அனைத்து விபரங்களையும் தருக : ----.
13. ஏற்கனவே நீர் அரசாங்க சேவையில் உள்ளவராக இருந்தால், விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியில் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளீரா என்பது பற்றிக் குறிப்பிடவும் :----.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்து கின்றேன். இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் ஏதேனும் பிழையானதென அல்லது பொய்யானதெனத் தெரியவந்தால் இப்பதவிக்குத் தகுதியற்றவராவேன் அல்லது சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன். மேலும் இவ்வாட்சேர்ப்புத் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலில் குறிக்கப்பட்ட சகல நிபந்தனைகளுக்கும் இத்தால் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தராயின் திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

நில அளவையாளர் நாயகம்,

இந்த நிறுவனத்தில் கடமையாற்றும் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி ................................ அவர்களினால் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். மேலும் அவர் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உள்ளாகவில்லை என்பதையும் இப்பதவிக்கு இவர் தெரிவுசெய்யப் பட்டால் இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்./முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
பதவி முத்திரை.

திகதி :----.
5-850

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2014**

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோ கத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2014, புரட்டாதி மாதம், நகர இலக்கம் 1 கொழும்பு மற்றும் நகர இலக்கம் 2 யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடாத்தப்படும். விண்ணப்பப்படிவத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரம் பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2014.06.30 என இத்தால் அறிவிக்கப் படுகின்றது. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

2. வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப் பட்டுள்ளது. அந்த மாதிரிப் படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரி தனது விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்ப


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, யூன் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, யூன் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*''ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.''*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

படிவம் ஏ4 அளவிலான கடதாசியைத் தவிர வேறு எந்தக் கடதாசியிலும் தயாரிக்கப்படலாகாது. இலக்கம் 1 தொடக்கம் 7 வரையில் முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலுமாக தயாரித்துக்கொள்ளல் வேண்டும். அதனை விண்ணப்பதாரர் தனது கையெழுத்துக்களினால் நிரப்புதல் வேண்டும். மேலும் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படும்போது அங்கே தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவத்தில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் இல்லாத விண்ணப்பப்படிவங்களும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் மற்றும் பூர்த்திசெய்யப்படாத தகவல்கள் குறிப்பிடப் பட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப் படும். முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் இரண்டிற்கும் தோற்றுவதற்கு எதிர்பார்ப்பதாயின் அதுபற்றி சரியாக குறிப்பிட்டுள்ள இரண்டு விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் மேலே உள்ள தகவல்களை உரிய முறையில் 7(i) அல்லது (ii) தகவல்களைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும், இந்த இரண்டு பரீட்சைகளுக்கும் பரீட்சைக் கட்டணம் தனித்தனியாகச் செலுத்தி இரண்டு பற்றுச்சீட்டுக் களைப் பெற்று தனித்தனியாக ஒட்டுதல் வேண்டும்.

3. விண்ணப்பப்பத்திரங்கள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக (பிரதேச செயலகங்களாயின் பிரதேச செயலாளரின் ஊடாக) 2014.06.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ''பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்லை'' எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும் என்பதுடன், விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்படல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தின் போட்டோப் பிரதியொன்று தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனமாக இருக்கும். பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும் என்பதுடன், விண்ணப்பித்த மொழி பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது. அரச கரும மொழிக் கொள்கை பற்றிய விடயம் தொடர்பாக புதிய பிரவேச உத்தியோகத்தர்களினால் தமது விண்ணப்பம் அரச கரும மொழியில் அல்லது தாம் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழியின் பிரகாரம் தமிழ் மொழியில் அல்லது ஆங்கில மொழியில் தயாரித்து அனுப்ப முடியும்.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விண்ணப்பதாரி களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கால அட்டவணைப் பிரதியொன்றுடன் அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரி களுக்கு பிரவேசப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறா விடில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களுடைய முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் என்பவற்றைக் குறிப்பிட்டு பரீட்சைகள் திணைக்களத்தில் விசாரித்தல் வேண்டும். நீங்கள் கொழும்புக்கு வெளியில் உள்ள பிரதேசமொன்றிலுள்ள விண்ணப்ப தாரியாயின், உங்களுடைய மேற்குறிப்பிட்ட விபரங்கள் அடங்கிய கடிதத்தில், தொலைநகல் ஒன்றின் மூலம் பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றை உங்களுக்கு அனுப்புவதற்காக உங்களுடைய தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு அதனை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பி விசாரணை செய்வதும் பொருத்தமானதாகும். அதில் தேவையான தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக உங்களிடம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டி ஏற்பட்டி ருப்பின் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப் படிவத்தை பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் தயார்நிலையில் வைத்திருப்பது மிகவும் பயனுள்ளதாகவிருக்கும்.

5. **ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற எல்லா விடயங்களின்போதும் பரீட்சை மண்டப அதிபதிக்கு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்கென கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடி யாகும் தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்கூறப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க இயலாத விண்ணப்பதாரி ஒருவரின் அபேட்சகத் தன்மையை நிராகரித்தல் அல்லது ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு பரீட்சைகள் ஆணையாள ருக்கு அதிகாரமுண்டு.

6. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சை விண்ணப்பதாரர்களிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும் :-

(அ) ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்காகவும் முதல் முறை விண்ணப்பிக்கும்போது பரீட்சைகளுக்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) முதலாவது தடவையின் பின்னர் ஒவ்வொரு வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்காகவும் 400 ரூபா வீதம் அறவிடப் படும்.

(இ) ஒரு பாடத்திற்கு 150 ரூபா அறவிடப்படும்.

உரித்துடைய பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளரின் வருமானத் தலைப்பு இல. 2003-02-13 இற்கு வரவிலிடப்படக்கூடியதாக நாட்டிலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலேனும் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் அதன் ஓரத்தைக் கழன்றுபோகாத வகையில் ஒட்டவும். பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்று தம்மிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானதாக இருக்கும். வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் இரண்டிற்கும் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணத்தைத் தனித்தனியே செலுத்திய இரண்டு பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டு உரிய விண்ணப்பப் படிவங்களில் ஒட்டுதல் வேண்டும்.

7. இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப் படும் என்பதுடன், அவரினால் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்படுத்தப்படுவர். பகுதி I : தொகுதி (IIஅ) வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள பரீட்சை விண்ணப்ப தாரர்களுக்கான ஒழுங்குவிதிகள் இப்பரீட்சைக்கும் உரித்துடையதாகும். பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டப அதிபதிக்கு தங்களது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை உள்ள மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பிரவேசப்பத்திரமொன்று வழங்கப்பட் டுள்ள தங்களது திணைக்கள/அலுவலகங்களிலுள்ள உத்தியோகத்தர் களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு திணைக்கள/அலுவலக தலைவர்களினால் கடமை லீவு வழங்கப்பட வேண்டும். விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதுடன், பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்கியமையால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளாரெனக் கருதக்கூடாது. மேலும் விண்ணப்பப்டிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழிமூல விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9. இந்த ஒழுங்குவிதிகளில் அடங்கியில்லாத ஏதேனும் விடயமொன்று இருப்பின் நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின்படி அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் ஒவ்வொரு மொழியிலும் வெளியிடும்போது யாதேனும் பொருத்தமற்ற தன்மை காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும்.

11. முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையுடன் தொடர்புடைய பாடத்திட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான பாடத்திட்டம் :-**

(அ) முதல் வினைத்திறன் தடைப்பரீட்சை பின்வரும் விடயங்களில் ஒவ்வொன்றும் 3 மணித்தியாலங்களைக் கொண்ட 4 வினாத்தாள் களைக் கொண்டிருக்கும் :-

(1) அரசாங்க நிதி நடைமுறைகள் (பாட எண் 01) - 100 புள்ளிகள்

(2) சட்டமும் முகாமைத்துவமும் (பாட எண் 02) - 100 புள்ளிகள்

(3) நிருவாகம் (பாட எண் 03) - 100 புள்ளிகள்

(4) அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல் வழங்குதல் (பாட எண் 04) - 100 புள்ளிகள்

(ஆ) சேவையின் பிரமாணக் குறிப்பு மற்றும் நியமனக் கடிதம் என்பவற்றின் ஏற்பாட்டின் பிரகாரம் உரிய கால எல்லைக்குள் அல்லது அதற்கு முன்னர் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய அதேவேளையில், சகல பாடங்களுக்காகவும் ஒரே தடவையில் அல்லது வெவ்வேறாக பல தடவைகளிலோ பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அலுவலருக்கு அனுமதி இருக்கின்றது.

(இ) பரீட்சார்த்திகள் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு வினாத் தாளிலும் 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

**பாடத்திட்டம் :**

1. ***அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் (பாட எண் 01)***.- நிதி ஒழுங்குவிதிகளின் பிரயோகம் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், திறைசேரி சுற்றறிக்கைகள், வருமானம், செலவினம், வெளிநாட்டு உதவி, வருடாந்த மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகள், அரச படுகடன் வழங்கல், கேள்விப்பத்திரங்கள், கட்டுநிதிகள் மற்றும் முற்பணங் கள் நாட்டின் கணக்கு, தொழிற்பாட்டு மற்றும் பொருளாதார வகுப்பாக்கங்கள், வரவுசெலவுத் திட்ட நிகழ்ச்சித் திட்டமும் செயலாற்றுகையும், நிதி அமைச்சரின் பணிகள், பொதுத் திறைசேரி, திட்டமிடல் அமைச்சு, செயலாளர்கள் கணக்காய் வாளர் மற்றும் அரச கணக்குகள் குழு என்பன தொடர்புற்ற நிதி ஒழுங்கு விதிகளும்/நடைமுறைகளும் என்பன பற்றி பரீட்சார்த்தி கள் பரிசோதிக்கப்படுவர்.

2. ***சட்டமும் முகாமைத்துவமும் (பாட எண் 02) :***

சட்டம் :
சட்டத்தின் வரைவிலக்கணம்
இலங்கையின் சட்ட முறைகள்
இலங்கையின் நீதிமன்ற முறைகள்
ஒப்பந்தச் சட்டம்
முகவராண்மைச் சட்டம்
பொருட்களின் விற்பனை
வாடகைக் கொள்வனவு
பேரம் பேச்சுவார்த்தை சாதனங்கள்
பிணையங்களின் உத்தரவாதம்
காப்புறுதி

முகாமைத்துவம் :
முகாமைக்கான அறிமுகம்
முகாமையாளர்களது பணிகளும் தேர்ச்சியும்
திட்டமிடல் செயல்முறையும் ஒழுங்கமைப்பு முறை மட்டங்கள் அமைத்தலும்
ஒழுங்கமைவு அமைப்பு
மனித வளங்களின் முகாமை
செயலாற்றுகை மதிப்பீடு
மேம்படுத்தல்
தலைமைத்துவம்
தொடர்பாடல்
தீர்மானம் எடுத்தல்
பிரச்சினைகளைத் தீர்த்தல்
மாற்றத்தை முகாமை செய்தல்
முகாமைத்துவ சிக்கல்கள்
முகாமைத்துவக் காலம்
தர வட்டம், உற்பத்தி மற்றும் பலன்
முகாமைத்துவ நன்நெறியும் பொறுப்புக்களும்

3. ***நிர்வாகம் (பாட எண் 03)***.- தாபன விதிக்கோவையின் VII, IX, XI, XII, XV, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII அத்தியாயங்கள்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதிகளும் நடைமுறை களும் - தொகுதி I இன் i முதல் vi வரையிலான அத்தியாயங்கள்.

4. ***அறிக்கை எழுதலும் முகாமைக்கு தகவல் வழங்குதலும் (பாட எண் 04)***.- முகாமைத்துவ தகவல்கள் சம்பந்தமாக சமயோசிதத் தன்மையின் திட்பநுட்பம் மற்றும் பரிபூரணத் தன்மையின் முக்கியத்துவம் :

தொடர்புடைய தகவல் பயன்பாடு
காலத்திற்குரிய அறிக்கைகள்
கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகள், அறிக்கைகள் எழுதுதல்
முகாமைத்துவ அறிக்கைக் கட்டமைப்பு
வெளிப்படுத்தவேண்டிய முக்கிய பெறுபேறுகள்
பெறுபேறுகளை வரைவிலக்கணப்படுத்தல்
வேறுபாடுகளுக்கான முன்மொழிவுகள்
தரவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் புள்ளிவிபர முறைகளின் உபயோகம்
செயலாற்றுகையினை ஒப்பீடு செய்தல்
முகாமைத்துவ அறிக்கைகளின் வீதங்கள் பயன்பாடு
வரைபடம் மூலம் விளக்குதல்
தொழிற்றுறைச் சொற்பொழிவுகள், விரிவுரைகளுக்குச் செவிமடுத்தல்
விரிவுரைகளை வாய்மொழி மூலம் அறிவித்தல்
குழுமக் கலந்துரையாடல்கள்
கருத்தரங்குத் திறமைகள்
உரை நிகழ்த்துதல்

**இலங்கை கணக்காளர் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான பாடத் திட்டம் :-**

(அ) இலங்கை கணக்காளர் தடைப்பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

(1) முகாமைக் கணக்கீடு (பாட எண் 05) - 100 புள்ளிகள்

(2) அரசாங்க பொது நிதி முகாமை (பாட எண் 06) - 100 புள்ளிகள்

(3) முகாமையும் அமைப்பும் (பாட எண் 07) - 100 புள்ளிகள்

(ஆ) சேவையின் பிரமாணக் குறிப்பு மற்றும் நியமனக் கடிதம் என்பவற்றின் ஏற்பாட்டின் பிரகாரம் உரிய கால எல்லைக்குள் அல்லது அதற்கு முன்னர் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய அதேவேளையில், சகல பாடங்களுக்காகவும் ஒரே தடவையில் அல்லது வெவ்வேறாக பல தடவைகளிலோ பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அலுவலருக்கு அனுமதி இருக்கின்றது.

(இ) இப்பரீட்சைக்குத் தோற்றுவோர் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**பாடத்திட்டம் :**

1. ***முகாமைக் கணக்கீடு (பாட எண் 05)***.- 3 மணித்தியால வினாத்தாள்.- வினாக்களைத் தெரிவுசெய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

கணக்கீட்டில் கட்டுப்பாட்டுக் கோட்பாடு பின்னூட்டல் திறந்ததும், கணனி முறை நியமச் செலவின் வகைகள், கருத்தியல் அடிப்படை மற்றும் நடைமுறை நியமங்கள் மற்றும் செயலாற்றுகை அமைப்பின் மூலத்துவங்களும் செயன் முறையும், நியமங்களின் மீளாய்வு, கற்றல், வளைய, தூண்டல் என்பவற்றின் ஆய்வு முரண்களையும் உப முரண்களையும் பகுத்தல், அவற்றின் ஆய்வுக் கட்டுப்பாட்டு கணக்கீட்டுசார் தொழிற்படு வகைகள், பணக்கூறுகள், வரவுசெலவுத் திட்ட எண்ணக்கரு, பாதீட்டு, கட்டுப்பாடு, நிருவாக வகை, நிலையான மற்றும் வளைதகு பாதீடு, தலைமைப் பாதீடு, குறைநிரப்பு பாதீடு, பாதீடு நிலையங்கள், பாதீட்டு தயாரிப்பும் சேர்த்திணைப்பிலும், செயல் நோக்கங்களிலும், முகாமை யினால் கலந்துகொள்ளுதலும், பாதீட்டு காலமும் முக்கிய பாதீட்டு காரணிகளை இனமறிதல்.

2. ***அரசாங்க பொது நிதி முகாமை (பாட எண் 06)***.- அரசாங்க பொது நிதி முகாமை 3 மணித்தியால வினாத்தாள். வினாக்களைத் தெரிவுசெய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

***அரசாங்க கணக்காளரின் பொறுப்புக்கள் :***

அரசியல் அமைப்பு, சட்டவமைப்பு ஆகியவற்றின் வடிவத் தின்கீழ் பொது நிருவாக அமைப்பு, மத்திய அரசாங்கம், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி, கூட்டுறவு இயக்கம் போன்றவற்றில் அறிவு.

பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு, திறைசேரியின் கடமைகள், திட்டமிடல் அமைச்சு, மதிப்பீட்டுக் குழு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அரசாங்க கணக்குக் குழு, திரட்டிய நிதியம். பாராளுமன்றக் கட்டுப்பாட்டின் பிரச்சினைகள்.

நிதியச்சுற்று வட்டம், திட்டமிடல், நிகழ்ச்சித் திட்டமிடல், தயாரித்தல், நிதிய அங்கீகாரம், கணக்கிடுதல், அறிக்கையிடல், மதிப்பீடு மற்றும் கணக்காய்வு.

மூலதனத்திற்கான கேள்வி, மூலதன உற்பத்தியும் ஊதியத்தை மதிப்பிடுகையில் பிரச்சினைகளும், கருத்திட்ட முன்னுரி மைப்படுத்தல், பிரமாணத்தின் நிதானமின்மைக்கான தள்ளுபடி, மீளக்கொடுப்பனவு, திருப்புதலின் கணக்கியல் வீதம், தற்போதைய தேறிய மதிப்பு, கழிவுப் பதிவேட்டுப் பெறுமானம், வரிகளினதும் முதலீட்டு ஊக்குவிப்புக் களினதும் தாக்கமும் கருத்திட்டச் செலவுக் கட்டுப்பாடு இறுதிக் கணக்காய்வும்.

உட்பிரமாணத் தீர்மானங்கள், உற்பத்திக் கலவை, உற்பத்தி செய்தல் அல்லது வாங்குதல், உற்பத்தி மாற்று முறைகள், முதலீட்டினால் ஏற்படும் பிரச்சினைகள், விலைக் கொள்கை, கடைக்கொள்கை, நுகர்வோரின் கேள்விப் போக்கின் தாக்கம், தேவையின் மீள் சக்தி, சந்தைப்படுத்து தலின் தந்திரம்.

செயலாற்றுகை, மதிப்பீட்டு நுட்பம், இலாபகரமான மூலப் பிரமாணமும் விகிதாசாரமும்.

செலவுப் பயன் பகுப்பாய்வு நடைமுறை மூலத்தின் முகாமை.

அரசாங்க வர்த்தக நிறுவனங்களின் நிதிக்கட்டுப்பாடு பாதீட்டு தயாரிப்பு முகாமை அறிக்கை கணக்கு ஆராய்தலும் நிதி விகிதங்களின் பிரயோகமும்.

பொது வர்த்தக நிறுவனங்களின் விலையிடல்.

கணக்கியலின் வடிவமும் உள்ளடக்கமும் அரசாங்க பொதுச் செயற்பாடுகளின் அறிக்கைகள்.

3. முகாமையும் ஒருங்கமைப்பும் (பாட எண் 07) - 3 மணித்தியால வினாத்தாள்.- வினாக்களைத் தெரிவுசெய்வதற்கு இடமளிக் கப்பட மாட்டாது.

பரீட்சார்த்தி முகாமையும் அமைப்பும் பற்றிய தத்துவங்களைப் புரிந்திருக் கிறார் என்பதை அரசாங்கத் துறையில் பிரச்சினைகளுக்கும் சிக்கல்களுக்கும் ஒத்த தத்துவங்களை எங்ஙனம் பிரயோகிக்கிறார் என்பதையும் நவீன முகாமைத்துவ திட்ட நுட்பங்களுடன் அவருக்கிருக்கும் பழக்கத்தையும் எடைபோடும் பாங்கிலேயே இப்பாடத்திற்கென வினாக்கள் உருவாக்கப் பட்டுள்ளது.

பீ. பி. ஜயசுந்தர,
செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2014, மே 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பயன்பாட்டிற்காக)

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2014**

First and Second Efficiency Bar Examination for Officers in Grade III of The Sri Lanka Accountants' Service - 2014

திணைக்களத் தலைவரின் ஊடாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

* பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரமும் நகர இலக்கமும் (அறிவித்தலின் முதலாம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு நகரத்தை ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் எழுதவும்.)

நகரம் நகர இலக்கம்

* பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதவும்.)

* விண்ணப்பிக்கும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை :

முதலாவது - 1
இரண்டாவது - 2

(உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதவும்.)

(வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆவது பந்தியைப் பார்க்கவும். இரண்டு பரீட்சைகளுக்கும் வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.)

1. பெயர் :

1.1 முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில், உதாரணம் : SUNIL, A.B.) :----.

1.2 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.3 தேசிய அடையாள அட்டை இல. :

1.4 தொலைபேசி இல. :

2. அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.1 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.2 அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3. 3.1 பால் :
பெண் - 1
ஆண் - 2
(உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதவும்.)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆவது பந்தியின்கீழ் தோற்றும் பாடங்கள் (ஒரு விண்ணப்பப்படிவத்தில் தோற்றவிருக்கும் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையுடன் தொடர்புடைய 4(i) அல்லது 4(ii) மாத்திரம் பூர்த்தி செய்தல் வேண்டும்.

4 (i) முதலாவது வினைத்திறன்காண் தடை

| பாடம் | பாட எண் |
|---|---|
| ........................................................ | ☐ |
| ........................................................ | ☐ |
| ........................................................ | ☐ |
| ........................................................ | ☐ |
| ........................................................ | ☐ |

4 (ii) இரண்டாவது வினைத்திறன்காண் தடை

| பாடம் | பாட எண் |
|---|---|
| ........................................................ | ☐ |
| ........................................................ | ☐ |
| ........................................................ | ☐ |

5. இலங்கைக் கணக்காளர் சேவை வகுப்பு III இல் சேர்ந்த திகதி (சரியாக கடமையினைப் பொறுப்பேற்ற திகதியைக் குறிப்பிடுதல் வேண்டும்.) :----.
6. சேவையாற்றும் இடத்தின் பெயர் (பிரதேச செயலகம் ஒன்றாயின் அந்த அலுவலகத்தின் பெயர்) :----.
7. பரீட்சைக்குத் தோற்றுவது முதல் முறையாகவா ? :----.
8. பரீட்சைக்குத் தோற்றுவது முதல் முறையாக இல்லையெனில் செலுத்திய பரீட்சைக் கட்டணம் :-
(i) செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கம் :----.
(iii) திகதி :----.

| பற்றுச்சீட்டை இங்கே கழறாதவாறு நன்கு ஒட்டவும். |
|---|

9. மேற்படி விடயங்கள் சரியானவை எனவும், மேலே குறிப்பிடப் பட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரிமையுள்ளது எனவும் குறிப்பிடுகிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் எடுக்கும் முடிவுகளுக்கும் உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாகக் கையொப்பம் இடுவதற்கு அங்கீகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் முன்னிலையில் அல்லது தமது பிரதேசத் தலைவரின் முன்னிலையில் விண்ணப்பதாரர் ஒருவர் கைச்சாத்திடல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலக உத்தியோகத்தர் ஒருவரான, நான் தனிப்பட்ட முறையில் அறிந்த திரு./ திருமதி/ செல்வி .................................. அவர்கள் .................................. ஆந் திகதி எனது முன்னிலையில் கைச்சாத்திட்டதை இத்தால் உறுதிசெய்கின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே குறிப்பிட்டுள்ள தகவல்களை பரீட்சித்துப் பார்த்ததாகவும், அவை சரியானவை எனவும்,
(ii) விண்ணப்பதாரர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி உடையவர் எனவும் உறுதி செய்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரையை இடவும்).

பதவி :----.
திகதி :----.
5-799

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் முத்திரையிடப்பட்ட விலைமனு மூலம் விற்பனை செய்வதற்காக மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தினால் கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கோரல் - 2014**

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடமையாக்கப்பட்ட மோட்டார் லொறிக்கான பகிரங்க மூடிய விலைமனுக் கோரல் நடைமுறை மூலம் விற்பனை செய்யப்பட இருக்கின்றது. இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஆனி மாதம் 16 ஆந் திகதி பி. ப. 3.00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திர நடைமுறையூடாக விற்பனை செய்யப்படவுள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் விலைமனுக் கோரும் இறுதித் திகதியில் பி. ப. 3.00 மணிக்கு முன்னர் தமது உறுதிப்படுத்தப்பட்ட உரிமை கோரிக்கையினை முன்வைக்க முடியும். தவறும் பட்சத்தில் அவை தொடர்பாக எந்த நடவடிக்கையும் ஏற்கப்படமாட்டாது என்பதனை அறியத்தருகின்றேன்.

விண்ணப்பங்கள் யாவும் மேல் நீதிமன்ற நீதிபதி, மேல் நீதிமன்றம், மட்டக்களப்பு எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித முகப்பின் மேல் மூலையில் ‘‘மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தால் அரசுடமையாக்கப்பட்ட வாகனத்திற்கான விலை மனு’’ எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் மேல் நீதிமன்ற முத்திரை பொறிக்கப்பட்ட மற்றும் கணக்காளரின் கையொப்பம் இடப்பட்ட படிவங்களில் மாத்திரம் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

இதற்காக மீள் செலுத்தப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் நூறு (100) ரூபாவுடன் பின்வரும் அடிப்படையிலான வைப்புப் பணத்தினைச் செலுத்துதல் வேண்டும். இவ்விண்ணப்பப்பத்திரம் வழங்குதல் 2014, ஆனி மாதம் 13 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணியுடன் நிறுத்தப்படும்.

| தொடர் இலக்கம் | வாகன விபரம் | வகை | வழக்கு இல. | விற்பனைக்காக வழங்கப்பட்ட இலக்கம் | வைப்பு கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 1 | லொறி - 01 | L. A. Ley JS - 6297 | AR 449/11 | MC/BAT/02/2013 | 2,000 |

குறிப்பிட்ட கால நேரத்திற்குள் பெற்றுக்கொள்ளப்படும் முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஆனி மாதம் 16 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணிக்கு சமுகமளித்த கேள்விமனு சமர்ப்பித்தவர்கள் முன்னிலையில் மேல் நீதிமன்ற பெறுகைக் குழுவினால் திறக்கப்படும்.

விலை மனுவின் மூலம் கூடிய விலையைக் குறிப்பிட்டுச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு அவ்வாகனத்தை விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்தினை மேல் நீதிமன்ற பெறுகைக் குழு பிறப்பிக்கும். இதன் அடிப்படையிலான விற்பனை நடைமுறையினை குறிப்பிட்ட நீதிமன்றம் மேற்கொள்ளும்.

விலைமனு கோரலின் ஊடாக விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனத்தை நேரடியாக சமுகமளித்து கடமை நாட்களில் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 2.30 மணி வரைக்கும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதிவாளருடன் தொடர்புகொண்டு பார்வையிடலாம்.

விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களுக்கு மதிப்பீட்டுப் பெறுமதி கணிக்கப்பட்டுள்ளதால் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்களில் குறிப்பிட்ட பெறுமதி குறைவானதாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாகனங்களினை விற்பனை செய்வதிலிருந்து நிறுத்தி வைப்பதற்கு பெறுகைக் குழுவிற்கு பூரண அதிகாரம் உண்டு.

விற்பனை செய்யப்படும் வாகனத்திற்கான பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும். மேலும் எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்படுதல் வேண்டும். காசோலைக் கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேற்படி மூடிய விலை மனு ஊடான விற்பனை தொடர்பான இறுதித் தீர்மானம் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற பெறுகைக் குழுவுக்கே உரித்தானதாகும்.

வீ. சந்திரமணி,
மேல் நீதிமன்ற நீதிபதி.

மேல் நீதிமன்றம்,
மட்டக்களப்பு,
2014, மே 12.
5-852

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

களனி, வெதமுள்ள, கண்டி றோட், இலக்கம் 102, 1 ஆம் லேன் எனும் முகவரியைச் சேர்ந்த ஜெனிபர் அன்டநெட் பெரேரா (தே. அ. அ. இல. 628041032 எக்ஸ்) ஆகிய நான், இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் தெரிவிப்பதாவது,

2005, புரட்டாதி மாதம் 1 ஆந் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே. எச். எம். தர்மவர்தன ஜயசிங்க அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 1518 ஆம் இலக்கமுடைய மேற்படி தத்துவப்பத்திரம் களனி, வெதமுள்ள, கண்டி றோட், இலக்கம் 102, 1 ஆம் லேன் எனும் முகவரியைச் சேர்ந்த நெஸ்ட்டா பெரேரா அல்லது நெஸ்ட்டா பிரான்சிஸ் (தே. அ. அ. இல. 528520073 வீ) என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட மேற்படி தத்துவப்பத்திரம் 2014 ஆம் வருடம் வைகாசி மாதம் 9 ஆந் திகதி முதல் இரத்துச்செய்யப்பட்டு செயலற்றுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன். மேற்படி தத்துவப்பத்திரம் வைத்திருந்த வருடன் இனிமேல் எவராவது கொடுக்கல் வாங்கல் அல்லது வேறெவ்விதமான பரிமாற்றம் செய்தாலும் அதற்கு நான் பொறுப்பல்ல என இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜெனிபர் அன்டநெட் பெரேரா.

5-794

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, எரோனஸ் ஒழுங்கை, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு, இல. 365/2 ஐச் சேர்ந்த அருணா கென் என்றறியப்பட்ட அருணா தேவராஜ் ஆகிய நான், மட்டக்களப்பு, நாவற்குடா, மாதர் வீதி, இல. 33 ஐந் சேர்ந்த ஆறுமுகம் கண்ணாமுத்து நடராஜாவிற்கு வழங்கப்பட்ட பகிரங்க நொத்தாரிசு டீ. சீ. சின்னையாவினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 1993, நவெம்பர் மாதம் 1 ஆந் திகதியிடப்பட்ட விசேட அற்றோணி தத்துவ இல. 2125 இனை 2012, ஐப்பசி 19 ஆந் திகதி அமுலுக்கு வருமாறு இரத்துச்செய்து இல்லாதொழிப்பதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு இத்தால் அறியத்தருகிறேன். அத்துடன் சொல்லப்பட்ட ஆறுமுகம் கண்ணாமுத்து நடராஜாவினால் என் சார்பாக மேற்கொள்ளும் எந்தவித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

அருணா கென் என அறியப்பட்ட அருணா தேவராஜ்.

5-784

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

கல்கிஸ்ஸ, வட்டராப்பொல வீதிக்கு அப்பால், இல. 97சீ, அபேசேகர வீதி எனும் முகவரியில் வதியும் ஹேமலதா சந்திரா கருணாரட்ன குணவர்தன ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு சரோஜா ரேணுகா கருணாரட்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 3370 ஆம் இலக்கம் மற்றும் 2012, மே 2 ஆந் திகதியைக் கொண்டதும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் உள்ள எழுத்து மூலம் அதிகாரம்பெற்ற புத்தகத் தொகுதி/பக்கம் 101/64 மற்றும் நாளேடு இலக்கம் 5404, 2012.08.07 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டு கல்கிஸ்ஸ, வட்டராப்பொல வீதிக்கு அப்பால் இல. 97சீ, அபேசேகர வீதி எனும் முகவரியில் வதியும் ஆனந்த துஷ்மந்த குணவர்தன மற்றும் சிரியா வத்ஸலா சாந்தனி குணவர்தன ஆகியோரினால் எனக்கு வழங்கப்பட்ட 3730 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணி தத்துவத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதனால், மேற்கூறப்பட்ட அற்றோணி தத்துவம் 2013, திசெம்பர் 31 ஆந் திகதி தொடக்கம் இரத்துச் செய்யப்பட்டு, இல்லாதொழிக்கப் பட்டு, வலுவற்றதாக்கப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஹேமலதா சந்திரா கருணாரட்ன குணவர்தன.

5-805

**பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பழைய பெயர் : கெவில்டன் இலெக்ட்ரிகல் புறடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 4082
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 146, டோசன் வீதி, கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : கெவில்டன் பவர்வெயா (பிறைவேட்) லிமிட்டெட்
பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி : 02.04.2014

பணிப்பாளர்/கம்பனிச் செயலாளர்.

5-871

**பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பழைய பெயர் : பீ஦ பிளஸ் கெறெசல் மோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 4167
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 146, டோசன் வீதி, கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : கெறெசல் மோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி : 02.04.2014

பணிப்பாளர்/கம்பனிச் செயலாளர்.

5-872

**பொது அறிவித்தல்**

ஜீஎஸ்எம் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (பதிவிலக்கம் : பீவீ 97708) 2014, மாச்சு 20 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

பதிவு முகவரி : இல. 934, அகிறிகுல மாவத்தை, கொட்டாவ, பன்னிப்பிட்டிய, இலங்கை

5-807

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கிட்டோ குலோதிங் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 98404
கூட்டிணைப்புத் திகதி : 2014.05.05
பதிவு முகவரி : இல. 27 1/1, ரோஸ்மேட் பிளேஸ், கொழும்பு 7

கம்பனிச் செயலாளர்.

5-800

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : த பாத் ஸ்டோர் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 98336
பதிவு முகவரி : இல. 68, எஸ். டீ. எஸ். ஜயசிங்ஹ மாவத்தை, கொஹுவல, களுபோவில

செக்ரடேரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட் - பீவீ 5958.

5-842/1

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஜேம்ஸ் வில்கி இன்டீரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 98367
பதிவு முகவரி : இல. 40, கோல்பேஸ் கோர்ட் 2, கொழும்பு 3

செக்ரடேரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட் - பீவீ 5958.

5-842/2

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன :-

| கம்பனியின் பெயர் | பதிவு இலக்கம் | கூட்டிணைக்கப் பட்ட திகதி | பதிவு அலுவலகம் |
|---|---|---|---|
| (1) ப்றோ எக்ஸ் நியூசிலாந்து (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 98271 | 2014.04.28 | இல. 104, ஹவ்லொக் சென்ரல் பில்டிங், ஹவ்லொக் வீதி, கொழும்பு 5 |
| (2) ஸ்ரடி பிளஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 98366 | 2014.04.30 | இல. 129/1, ஸ்ரீ சரணங்கர வீதி, தெஹிவளை |

பினான்சியெல் அன்ட் பிசினெஸ் அசோசியேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

5-837

**கம்பனி பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியின் பெயரானது 2014, சித்திரை மாதம் 29 ஆந் திகதியிலிருந்து மாற்றம் பெற்றுள்ளது :-

கம்பனியின் முன்னைய பெயர் : இன்ரநஷனல் ஹொஸ்பிட்டலிட்டி மெனேஜ்மென்ட் அகடமி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 93741
கம்பனியின் பதிவு அலுவலகம் : இல. 76, இரண்டாவது வீதி, கொட்டிகாவத்தை வீதி, கொதட்டுவ புதிய நகரம்
கம்பனியின் புதிய பெயர் : இன்டநஷனல் ஹொஸ்பிட்டலிட்டி அன்ட் மெனேஜ்மென்ட் அகடமி (பிறைவேட்) லிமிட்டெட்

பினான்சியெல் அன்ட் பிசினெஸ் அசோசியேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

5-836

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இல. 90/6ஏ/02, டன்பார் வீதி, அட்டனில் வசிக்கின்ற கண்ணப்பன் சங்கர் ஆகிய நான், இத்தால் அறியத்தருவதாவது-

இலக்கம் 78/2ஜே, பொன்னகர், அட்டனில் வசிக்கின்ற சொக்கலிங்கம் சிவபாலசுந்தரம் என்பவருக்கு வழங்கப்பட்ட 2010.02.20 ஆந் திகதியிடப்பட்ட 130 ஆம் இலக்க அற்றோணி தத்துவப்பத்திரம் 2014.02.28 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

கண்ணப்பன் சங்கர்.

5-835

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

தெஹிவளை, பாமங்கட, இல. 58, துட்டுகெமுனு வீதி எனும் முகவரியில் வதியும் ரணசிங்ஹ முதியன்சேலாகே திலக சிரியாணி சந்திரசிரி ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். எம். பீ. என். அபேரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 259 ஆம் இலக்கத்தைக் கொண்டதும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் உள்ள எழுத்து மூலம் அதிகாரம்பெற்ற தொகுதி/பக்கம் 346/78 மற்றும் நாளேடு இலக்கம் 16480 மற்றும் 2006.12.06 ஆந் திகதி தெஹிவளை, பாமங்கட, இல. 58, துட்டுகெமுனு வீதி எனும் முகவரியைச் சேர்ந்த மனோ ரஞ்சன் விஜேபாகு என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை கூறப்பட்ட அற்றோணி தத்துவம் இல. 259 இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதனால் மேற்கூறப்பட்ட அற்றோணி தத்துவம் 2013, ஒற்றோபர் 26 ஆந் திகதி தொடக்கம் இரத்துச் செய்யப்பட்டு, இல்லாதொழிக்கப்பட்டு, வலுவற்றதாக்கப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ரணசிங்ஹ முதியன்சேலாகே திலக சிரியாணி சந்திரசிரி.

5-806

# ஏல விற்பனைகள்

**செலான் வங்கி பீஎல்சீ - காத்தான்குடி கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

*''கடன்பட்டோர்'' என்ற வகையில் மட்டக்களப்பு ஆரையம்பதி பூங்குன்றத்தில் பதிவு இல. ஆர்ஈவீ/ஆர்பீஎன்/01/பி1 கொண்டுள்ள மெசர்ஸ் ''லதா கொன்ஸ்ரக்ஷன்'' என்ற பெயர் வடிவில் அமைந்த வியாபார பங்குடைமை யாளரான யோகேஸ்வரி மகாலிங்கம் மற்றும் சோமசுந்தரம் மகாலிங்கம் என்பவர்களுக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.*

**முதலாவது ஏலவிற்பனை**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைப்பற்று அரைப்பட்டை கிராமத்தில் அரைப்பட்டையில் அமைந்துள்ள கிழக்குப் பகுதியில் சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள காணியின் விஸ்தீரணம் வடக்கில் இருந்து தெற்கு வரை ஆறு மற்றும் இரண்டில் ஒன்று (6 1/2) வெதமும், கிழக்கில் இருந்து மேற்கு வரை எட்டரை (8 1/2) வெதமும் மற்றும் தெற்குப் பகுதியில் ஒன்பது (9) வெதமும் மற்றும் தென்மேற்கு மூலைப்பகுதியில் மேற்கு பங்கில் காணியில் நடைபாதை மூன்று (3) கியூபிட் அகலத்தில் மேற்கு வேலியும் அமைந்துள்ளது. இது அனைத்து வழிமுறை விதிகளையும் ஒருங்கே கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட சொத்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. சிங்கராஜா என்பவரினால் 2005.04.04 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. ஏஎஸ்/2005/392 இல் குறிக்கப்பட்ட விபரம் பின்வருமாறு :-

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைப்பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அரைப்பட்டை கிராமத்தில் ஆரையம் பதியில் சகலதும் பிரிக்கப்பட்டு, அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள காணி ஒன்பது தசம் மூன்று ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 9.37பே.) அல்லது 0.237 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2014, யூன் 19 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்**.- காத்தான்குடி செலான் வங்கிக் கிளையிலிருந்து புதிய கல்முனை வீதியால் சுமார் 1.2 கி. மீ. தொலைவிலுள்ள ஆரையம்பதி வரை சென்று வலது பக்கமாக உள்ள தென் பவுன்டறி வீதியால் சுமார் 600 மீற்றர் சென்றால் பழைய கல்முனை வீதியை அடையலாம். பின்னர் சுமார் 100 மீற்றர் தூரம் சென்றால் 5 ஆம் கி. மீ. கட்டையை அடைந்து பின் இடதுபுறமாகத் திரும்பி 75 மீற்றர் சென்று வலதுபக்கமாக உள்ள பாதையால் 25 மீற்றர் சென்றால் குறிக்கப்பட்ட சொத்தை அடையலாம்.

**இரண்டாவது ஏலவிற்பனை**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைப்பற்று அரைப்பட்டையில் அமைந்துள்ள ''செக்கட்டியார் வளவு'' என்று அழைக்கப்படுகின்ற சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள காணியின் விஸ்தீரணம் வடக்கில் பத்தொன்பது (19) வெதமும், கிழக்கில் பன்னிரண்டும் நாலில் மூன்றும் (12 3/4) வெதமும் மற்றும் தெற்குப் பகுதியில் தென்கீழ் மூலையில் மேற்கு வரை ஏழு மற்றும் நாலில் ஒன்றும் (7 1/4) வெதமும் மற்றும் வடக்கில் ஐந்து (5) வெதமும் மற்றும் இதிலிருந்து தெற்கு, தென்மேற்கு மூலைப்பகுதி வரை (7) வெதமும் மற்றும் மேற்கில் ஆறு மற்றும் நாலில் ஒன்று (6 1/4) வெதமும் அமைந்துள்ளது. இது அனைத்து வழிமுறை விதிகளையும் ஒருங்கே கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட சொத்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. சிங்கராஜா என்பவரினால் 2006.08.22 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. ஏஎஸ்/எம்பீ/37 இல் குறிக்கப்பட்ட விபரம் பின்வருமாறு :-

